THE EXAMINATION OF THE WITNESS

(Section 281 Code of Criminal Procedure)

IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | |
|---|---|---|
| Calender | :**CC.No. 816/2022** | **PW1** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு. ராபின் | |
| Father's Name | : திரு. திருக்குமார் | |
| Village | : வடலிவிளை | |
| Taluk | : ராதாபுரம் தாலுகா | |
| Employment | : தனியார் வங்கி | |
| Age | : 27 | Date:19.05.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

**முதல் விசாரணை :–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் வங்கியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2021ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் மதியம் நானும் எனது நண்பர்கள் விவேக், வினோத் ஆகியோருடன் ரோஸ்மியாபுரத்தில் உள்ள ஆற்றில் குளிக்க சென்றோம். குளித்து முடித்துவிட்டு தோட்டத்தில் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது தவசிக்கனி இங்கை வைத்து சாப்பிடக்கூடாது என்று சொன்னார். அப்போது எங்களுக்குள் தகராறு ஏற்பட்டது. அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் வள்ளியூர் திலக் மருத்துவமனையில் சிகிட்சை பெற்றேன். சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தெரியாது. தற்போது நானும் எதிரியும் சமரசமாகி விட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அசா1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். **(நீதிமன்ற கேள்வி– யாராவது உங்களை**

**மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. போலீசார் விசாரணையில் கடந்த 15.10.2021ம் தேதி பகல் 3 மணிக்கு நான் ரோஸ்மியாபுரம் ஆற்றில் குளித்துவிட்டு அருகில் உள்ள தோட்டத்தில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் எங்களை தகாத வார்த்தைகள் பேசி கம்பால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், நான் மருத்துவமனையில் சிகிட்சையில் இருந்தபோது போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும் எதிரிக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.05.19 18:33:02 +0530

Judicial Magistrate,
Valliyoor.